[2019 பிப்ரவரி 14

79—

தொழிற்பேட்டை

***34393—திரு. சு. ரவி:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் தொகுதியில் தொழிற்பேட்டை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பா. பென்ஜமின், ஊரகத் தொழில் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், அரக்கோணம் தொகுதியில் தொழிற்பேட்டை அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லையென்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி அவர்கள்.*

திரு. சு. ரவி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மறைந்தும் மறையாமல் மக்கள் மனதில் நீக்கமற நிறைந்திருக்கிற மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். 'பிரார்த்திக்கும் உதடுகளைவிட உதவும் கரங்கள் சிறந்தது' என்றார் அன்னை தெரசா. அந்தவகையில், படித்த வேலையில்லாத இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்தி உதவ வேண்டும் என்ற அடிப்படையில், சென்னையில் உலகத் தொழில் முதலீட்டாளர்கள் மாநாட்டை நடத்தி, ரூ.3.00 இலட்சம் கோடி முதலீடுகளை ஈர்த்து, 11 இலட்சம் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கிய உதவும் கரங்களுக்கு சொந்தக்காரர், (மேசையைத் தட்டும் ஒலி) குடிமராமத்து மன்னன், எங்கள் மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்களையும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன்.*

2019 பிப்ரவரி 14]

முற்பகல் 11-20

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய அரக்கோணம் தொகுதி சென்னைக்கு மிக அருகாமையில் இருக்கின்ற ஒரு தொகுதி. இன்றைக்கு தொழில் வளர்ச்சியில் முன்னேற்றம் அடைந்து கொண்டிருக்கிற திருவள்ளூர் மாவட்டத்தையொட்டி அமைந்திருக்கிற ஒரு தொகுதி. அந்தத் தொகுதி, மிக தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, ஏழையெளிய மக்கள் அதிகமாக வாழக்கூடிய பகுதி. அங்கே படித்த ஆயிரக்கணக்கான இளைஞர்களெல்லாம் வேலையில்லாமல் இருக்கிறார்கள். விவசாயத்தை மட்டும் நம்பியிருக்கிற என்னுடைய தொகுதியில் இன்றைக்கு பாலாறு வறண்டுபோய் விவசாயமும் பொய்த்துப் போய்விட்டது. ஆகவே, அந்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கக்கூடிய வகையிலே தொழிற்பேட்டை ஒன்றை அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அரக்கோணம் தொகுதி என்றாலே தமிழ்நாடு எஃகு உருக்காலைக்கு பெயர் பெற்றது. அந்தத் தொழிற்சாலை 1998 ஆம் ஆண்டு மூடப்பட்டுவிட்டது. அதனால், 2,000 தொழிலாளர்கள் வேலை இழந்துள்ளனர். அந்தத் தொழிற்சாலையிலே கிட்டத்தட்ட 500 ஏக்கர் நிலம் உள்ளது. இன்றைக்கு Dennis Steels *என்ற தனியார் நிறுவனம் அந்நிறுவனத்தை ஏலம் எடுத்து, அவர்களும் அங்கே தொழிற்சாலை நடத்தாமல் மூடப்பட்டுள்ளது. தற்பொழுது அந்த இடம் பாரத வங்கியின் கட்டுப்பாட்டில் இருக்கிறது. அரசு தொழிற்பேட்டை அமைக்க இடம் தேடவேண்டிய அவசியம் இல்லை. திருவள்ளூர்-அரக்கோணம் நெடுஞ்சாலையில் 500 ஏக்கர் நிலம் இருக்கிறது. அந்த 500 ஏக்கர் நிலத்தில் ஒரு தொழிற்பேட்டை அமைத்துத் தந்தால் அரக்கோணம் தொகுதியைச் சுற்றியிருக்கிற இளைஞர்களுக்கு நல்லதொரு வேலைவாய்ப்பை ஏற்படுத்த முடியும். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுசென்று, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதைக் கனிவோடு பரிசீலிக்க வேண்டும். இன்றைக்கு கேட்டதையெல்லாம் வாரி வாரி கொடுக்கின்ற வள்ளல் குணம் கொண்ட நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இருக்கிறார். . . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி, சீக்கிரம் கேள்வியைக் கேட்டு முடியுங்கள்.*

திரு. சு. ரவி: *அங்கு ஒரு தொழிற்பேட்டை அமைத்துத் தரவேண்டுமென்று பணிவோடு கேட்டு அமர்கின்றேன்.*

[2019 பிப்ரவரி 14

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பா. பென்ஜமின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் மாவட்டம், அரக்கோணம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட அரக்கோணத்தில் 1998 ஆம் ஆண்டு 51.74 ஏக்கர் பரப்பளவில் தொழிற்பேட்டை அமைக்கப்பட்டது. இத்தொழிற்பேட்டையில் கடந்த 2010 ஆம் ஆண்டு சாலை, மின்சாரம், மழைநீர் வடிகால் வசதி போன்ற உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டு, 149 மேம்படுத்தப்பட்ட தொழில் மனைகள் மற்றும் 13 தொழில்கூடங்கள் உருவாக்கப்பட்டன. இவற்றில் 111 மேம்படுத்தப்பட்ட தொழில் மனைகள் மற்றும் 13 தொழில்கூடங்கள் தொழில் முனைவோர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. இத்தொழிற்பேட்டையில் தற்போது காலியாக உள்ள 38 மேம்படுத்தப்பட்ட தொழில் மனைகளை ஒதுக்கீடு செய்ய போதிய விளம்பரம் செய்யப்பட்டும் தொழில் முனைவோர்கள் முன்வராததால், மனைகள் ஒதுக்கீடு செய்யப்படாமல் காலியாக உள்ளன. ஏற்கெனவே அரக்கோணத்தில் இயங்கிவரும் தொழிற்பேட்டையில் மேம்படுத்தப்பட்ட தொழில் மனைகள் தொழில் முனைவோர்களால் ஒதுக்கீடு கோரப்படாமல் காலியாக உள்ள நிலையில், வேலூர் மாவட்டம், அரக்கோணம் தொகுதியில் மேலும் ஒரு புதிய தொழிற்பேட்டையை அமைக்க அவசியம் எழவில்லை என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி அவர்கள்.

திரு. சு. ரவி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியதுபோல் அரக்கோணம் தொகுதியில் ஏற்கெனவே ஒரு சிறிய தொழிற்பேட்டை 1996-2001 ஆம் ஆண்டில் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே அமைக்கப்பட்டு, அந்த தொழில் மனைகள் சென்னைவாசிகளுக்கு வழங்கப்பட்டன. 10 ஆண்டுகள் முடிவடைந்தும் அவர்கள் தொழிற்கூடமும் அமைக்கவில்லை; அங்கே தொழிலும் தொடங்கவில்லை. இதுகுறித்து நான் கோரிக்கை வைத்த பிறகு, அவர்களுக்கெல்லாம் உடனடியாக நோட்டீஸ் கொடுக்கப்பட்டது. அங்கே 30 பேர் தொழிற்கூடங்களை அமைத்திருக்கிறார்கள்.

2019 பிப்ரவரி 14]

இரண்டு அல்லது மூன்று தொழிற்கூடங்களில் தொழில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. 80 சதவிகிதம் தொழிற்கூடங்கள் காலியாக இருக்கின்றன. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அங்கு காலியாக உள்ள தொழிற்கூடங்களிலே உடனடியாக தொழில் தொடங்குவதற்கு, துறை அதிகாரிகள்மூலம் நடவடிக்கை எடுக்க முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பா. பென்ஜமின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கக்கூடிய அந்தக் கருத்தின் அடிப்படையில் விதிகளுக்குட்பட்டு, குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் அங்கு தொழிற்சாலைகள் அமைக்கப்படாத நிலையில், துறை சார்பாக அதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. ஆகவே, அவர் சொல்லியிருக்கக்கூடிய அந்த* SIDCO Industrial Estate-*ல் குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் அவர்கள் தொழிற்கூடத்தை அமைக்கவில்லை என்று சொன்னால், துறை ரீதியாக ஆய்வு செய்து, அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 80, மாண்புமிகு உறுப்பினர் திரு. தா.மோ. அன்பரசன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

80—

சிற்றுந்து வசதி

***36320—திரு. தா.மோ. அன்பரசன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆலந்தூர் தொகுதி, அய்யப்பன்தாங்கல்-பெரிய கொளுத்துவாஞ்சேரி-மதுரம் நகர் வழியாக மௌலிவாக்கம் செல்ல சிற்றுந்து இயக்க அரசு முன்வருமா?